**செ. கு. எண்: 107** **நாள் :08.06.2014**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 8.6.2014

30.4.2014 அன்று கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், வடசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகள் செல்வி லோகாம்பாள் தனக்கு ஏற்பட்ட மனஉளச்சல் காரணமாக தீக்குளித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக, 1.5.2014 அன்று திருச்சிராபள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், குளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முகமது சலீம் என்பவரின் மகன் சௌகத் அலி மற்றும் திரு. அலாவுதீன் என்பவரின் மகன் பைசல்கான்;

2.5.2014 அன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், சித்தலக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரி என்பவரின் மனைவி திருமதி விஜயா;

3.5.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், படுநெல்லி கிராமத்தைச் சேர்ந்த திரு. வேங்கட பிள்ளை என்பவரின் மகன் நாராயணசாமி;

4.5.2014 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எ.மழவராயனூர் கிராமத்தில் பெரம்பலூர் மாவட்டம், காரியனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.கந்தசாமி என்பவரின் மகள் கனகா;

5.5.2014 அன்று விருதுநகர் மாவட்டம், வச்சகாரப்பட்டி குறுவட்டம், கடம்பன்குளத்தைச் சேர்ந்த திரு. ராமர் என்பவரின் மகன் காளிதாஸ்;

8.5.2014 அன்று வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், ரெட்டிவலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடேசன் என்பவரின் மகன் தினகரன்;

–– ஆகியோர் இடி, மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

2.5.2014 அன்று அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், திடீர் குப்பம் பகுதி அருகே அரிசி மூட்டைகள ஏற்றி சென்று கொண்டிருந்த லாரி நிலை

தடுமாறி சாலை ஓர கூரை வீட்டின் மீது மோதியதில், திரு. இளஞ்செழியன் என்பவரின் மனைவி சல்பா, திரு. கொளஞ்சிநாதன் என்பவரின் மனைவி அமுதா, மகள் ரேவதி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

8.5.2014 அன்று மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், அவனியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகள் மோகனாதேவி, வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

11.5.2014 அன்று திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், இராக்கியாபாளையம் கிராமம், மஜ்ரா உமையஞ்செட்டிபாளையத்தில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி திருமதி ராமாத்தாள் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

13.5.2014 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேக்குடி கிராமம், ஜியாபுரம் ரயில்வே இருப்பு பாதையை கடக்க முயன்ற திருச்செந்துரை கிராமத்தைச் சேர்ந்த ஊர்காவல் படை காவலர் திரு. மணிகண்டன் என்பவர் ரயில் மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**